வந்தார்கள். சர்க்கார் கொண்டு வந்த சட்டத்தினால் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளுக்குத்தான் விசாரிக்க அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால் 1978 ஆம் ஆண்டிலிருந்து ஆயிரக்கணக்கான கேஸ்கள் ஒவ்வொரு கோர்ட்டிலும் தேங்கி இருக்கிறது. இரண்டாம் வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளுக்கு, முதல் வகுப்பு மாஜிஸ்திரேட்டு அதிகாரம் கொடுத்து, இவைகளை டிஸ்போஸ் செய்வதற்கு அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்டக்ரேஷன் ஆப் ஜீடிஷியரி நடைமுறைப்படுத்துகின்றபோது இந்தப் பிரச்னை தீரும் என்று அரசு நம்புகிறது.

தங்கமாபட்டியிலுள்ள கிராமக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் மீதான புகார்.

*வினா எண் 582—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் வட்டம், அய்யலூர் கிராமம், தங்கமாபட்டியில் உள்ள கிராம கூட்டுறவு சங்கத்திடம் மக்களுக்கு வழங்க கொடுக்கப்பட்ட சீனி மூட்டைகளை அச்சங்கத் தலைவர் விற்றுவிட்டதாக 1980 ஜுன் மாதத்தில் புகார் செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) வழக்குப் பதிவு செய்யப்பட்டு காவல்துறையினரின் விசாரணையில் இருந்து வருகின்றது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு சங்கத்திற்கு மக்களுக்கு வழங்கக் கொடுக்கப்பட்ட சீனியை விற்கும்போது, அந்தத் தலைவரை பொதுமக்களே பிடித்தார்கள். வழக்கில் உள்ள அந்தத் தலைவர் பதவியைப் பிடித்துக் கொண்டிருக்கிறார். வழக்கு முறையாக நடத்த, அந்தத் தலைவரை பதவியிலிருந்து நீக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

98 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் திரு மணிவாசகம், மற்றும் 7 பேர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது; வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. விசாரணை நடைபெற்றுக் கொண்டு வருகிறது. தலைவர் பதவியில் இருப்பவர் பற்றி, தகவல் இல்லை தலைவர் சம்பந்தப்பட்டிருப்பதாகத் தகவல் இருக்குமானால், கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

சைதாப்பேட்டையில் கழிவு நீர் போக்கு மற்றும் குடிநீர் குழாய் இணைப்புத் திட்டங்கள்.

*வினா எண். 583—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை, சைதாப்பேட்டை தொகுதியில் பல்வேறு பகுதிகளில் கழிவு நீர் போக்கு (Drainage System) மற்றும் குடிநீர் குழாய் இணைப்பு திட்டங்களை நிறைவேற்ற எடுக்கப் பெற்ற நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியானது மாநகராட்சி கோட்டங்கள் 138 முதல் 147 வரை உள்ளடங்கியதாகும்.

குடிநீர் : இத்தொகுதியில் தனியார் தெருக்களைத் தவிர ஏறக்குறைய மற்றெல்லா பகுதிகளிலும் குடிநீர் வசதி முறை செயல்பட்டு வருகிறது. இப்பகுதிகளில் தற்போது சுமார் 4,900 வீட்டு இணைப்புகள் உள்ளன. வீட்டு இணைப்பு வேண்டி மனு செய்வோருக்கு இணைப்புகளும் உடனுக்குடன் கொடுக்கப் பட்டு வருகிறது. வசதியற்றோர் நலனுக்காக இப்பகுதியில் தற் சமயம் 240 பொதுக் குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் அபிவிருத்தி செய்து வரும் 19 குடிசைப் பகுதிகளில் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் 77 பொதுக் குழாய்களை அமைத்து, குடிநீர் வழங்கி வருகிறது. இவை தவிர மேலும் 9 குடிசைப் பகுதிகளில் 93 பொதுக் குழாய்களும் பம்புகளும், அமைத்து, குடிநீர் வழங்கப் பட்டு வருகிறது.

கழிவு நீரகற்றல் : சைதாப்பேட்டைப் பகுதியில் மாநகராட்சி கோட்டங்கள் 140 முதல் 145 வரையில் தனியார் தெருக்கள் தவிர ஏறக்குறைய மற்ற எல்லா தெருக்களிலும் பாதாள சாக்கடை வசதி செய்யப்பட்டுள்ளது. இப் பகுதிகளில் வீட்டு இணைப்பு விரும்பி மனு செய்வோருக்கு இணைப்புகள் உடனுக்குடன் கொடுக்கப்பட்டு வருகின்றன. கிண்டி, வேளச்சேரி,